# யூலை - 30 - பொதுக்கால17ம் வார ஞாயிறு

### தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார் தாம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கிறார் (உரோ 8:30)

## முதல் வாசகம் : 1 அரசர் 3 : 5, 7 – 12

அன்றிரவு கிபயோனில் ஆண்டவர் சாலமோனுக்குக் கனவில் தோன்றினார். "உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்!" என்று கடவுள் கேட்டார். என் கடவுளாகிய ஆண்டவரே, நீர் அடியேனை என் தந்தை தாவீதுக்குப் பதிலாக அரசனாக்கியுள்ளீர். நான் செய்வதறியாத சிறு பிள்ளை.இதோ! உமக்கென நீர் தெரிந்து கொண்ட திரளான மக்களிடையே அடியேன் இருக்கிறேன். அவர்கள் எண்ணிக் கணிக்க முடியாத மாபெரும் தொகையினர்.எனவே, உம் மக்களுக்கு நீதி வழங்கவும் நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும். இல்லாவிடில், உமக்குரிய இம்மாபெரும் மக்கள் இனத்திற்கு நீதி வழங்க யாரால் இயலும்?" என்று கேட்டார்.சாலமோன் இவ்வாறு கேட்டது ஆண்டவருக்கு உகந்ததாய் இருந்தது.கடவுள் அவரிடம், "நீடிய ஆயுளையோ, செல்வத்தையோ நீ கேட்கவில்லை. உன் எதிரிகளின் சாவையும் நீ விரும்பவில்லை. மாறாக, நீதி வழங்கத் தேவையான ஞானத்தை மட்டுமே கேட்டிருக்கிறாய்.இதோ! நான் இப்பொழுது நீ கேட்டபடியே செய்கிறேன். உனக்கு நிகராக, உனக்கு முன்னே எவரும் இருந்ததில்லை. உனக்குப் பின்னே இருக்கப் போவதுமில்லை.

**பதில்பாடல் :** உமது திருச்சட்டத்தின் மீது எற்றுனைப் பற்றுக் கொண்டுள்ளேன்.

## இரண்டாம் வாசகம் : உரோமையர் 8 : 28 – 39

சகோதர சகோதரிகளே! கடவுளிடம் அன்புகூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு, அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பது நமக்குத் தெரியும்.தம்மால் முன்பே தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்றவாறு இருக்க வேண்டுமெனக் கடவுள் முன்குறித்து வைத்தார் அச்சகோதரர் சகோதரிகள் பலருள் தம் மகன் தலைப்பேறானவராய் இருக்க வேண்டுமென்றே இப்படிச் செய்தார்.தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார் தாம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கிறார் தமக்கு ஏற்புடையோரானோரைத் தம் மாட்சியில் பங்கு பெறச் செய்தார்.இதற்குமேல் நாம் என்ன சொல்வோம்? கடவுள் நம் சார்பில் இருக்கும்போது, நமக்கு எதிராக இருப்பவர் யார்?தம் சொந்த மகனென்றும் பாராது அவரை நம் அனைவருக்காகவும் ஒப்புவித்த கடவுள், தம் மகனோடு அனைத்தையும் நமக்கு அருளாதிருப்பாரோ?கடவுள் தேர்ந்து கொண்டவர்களுக்கு எதிராய் யார் குற்றம் சாட்ட இயலும்? அவர்கள் குற்றமற்றவர்கள் எனக் காட்டுபவர் கடவுளே.அவர்களுக்கு யார் தண்டனைத் தீர்ப்பு அளிக்க இயலும்? இறந்து, ஏன், உயிருடன் எழுப்பப்பட்டு கடவுளின் வலப் பக்கத்தில் இருக்கும் கிறிஸ்து இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறார் அன்றோ!கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்?"உம் பொருட்டு நாள்தோறும் கொல்லப்படுகிறோம், வெட்டுவதற்கென நிறுத்தப்படும் ஆடுகளாகக் கருதப்படுகிறோம்" என மறைநூலில் எழுதியுள்ளது அன்றோ!ஆயினும், நம்மேல் அன்பு கூர்ந்தவரின் செயலால் மேற்கூறியவை அனைத்திலும் நாம் வெற்றிமேல் வெற்றி அடைகிறோம்.ஏனெனில் சாவோ, வாழ்வோ, வானதூதரோ, ஆட்சியாளரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமை மிக்கவையோ,உன்னதத்தில் உள்ளவையோ, ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்தப் படைப்பும் நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை.

## நற்செய்தி : மத்தேயு 13 : 44 – 52

அக்காலத்தில் ஆண்டவர் இயேசு சீடர்களை நோக்கிக் கூறியதாவது "ஒருவர் நிலத்தில் மறைந்திருந்த புதையல் ஒன்றைக் கண்டுபிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்துவிட்டு மகிழ்ச்சியுடன் போய்த் தமக்குள்ள யாவற்றையும் விற்று அந்த நிலத்தை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு இப்புதையலுக்கு ஒப்பாகும்."வணிகர் ஒருவர் நல்முத்துகளைத் தேடிச் செல்கிறார்.விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டவுடன் அவர் போய்த் தமக்குள் யாவற்றையும் விற்று அதை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு அந்நிகழ்ச்சிக்கு ஒப்பாகும்."விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொண்டுவரும் வலைக்கு ஒப்பாகும்.வலை நிறைந்ததும் அதை இழுத்துக்கொண்டு போய்க்கரையில் உட்கார்ந்து நல்லவற்றைக் கூடைகளில் சேர்த்து வைப்பர் கெட்டவற்றை வெளியே எறிவர்.இவ்வாறே உலக முடிவிலும் நிகழும். வானதூதர் சென்று நேர்மையாளரிடையேயிருந்து தீயோரைப் பிரிப்பர். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவர். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும். ""இவற்றையெல்லாம் புரிந்து கொண்டீர்களா?" என்று இயேசு கேட்க, அவர்கள், "ஆம்" என்றார்கள். பின்பு அவர், "ஆகையால் விண்ணரசு பற்றிக் கற்றுக்கொண்ட எல்லா மறைநூல் அறிஞரும் தம் கருவூலத்திலிருந்து புதியவற்றையும் பழையவற்றையும் வெளிக்கொணரும் வீட்டு உரிமையாளரைப்போல் இருக்கின்றனர்" என்று அவர்களிடம் கூறினார்.

**தியானம்:** நமது இவ்வுலக வாழ்வில் நமக்கு பல குறிக்கோள்கள் இருக்கலாம். எல்லாமே இவ்வுலகை சார்ந்தவையாகவே இருக்கும். ஆனால் நமது வாழ்வின் குறிக்கோள் விண்ணரசை நோக்கியதாக இருக்க வேண்டும் என்று யேசு இன்றைய நற்செய்தி மூலம் நமக்கு வெளிப்படுத்துகிறார். விண்ணரசை அடையும் பாதை மிக சுலபமானதொன்று அல்ல. நாம் எமது வாழ்வில் பல நிலைகளில் இருக்கலாம். இந்த இடத்தை அடைய பலவற்றை இழந்திருப்போம், விட்டுக்கொடுத்திருப்போம். உதாரணமாக நல்ல பெறுபேறு அடைய வேண்டும் என்றால் மாணவர்கள் தூக்கத்தை விட்டுக்கொடுக்க வேண்டும். அப்படி அவர்கள் கஷ்டப்பட்டு படித்தால்தான் நல்ல பெறுபேறை அடைய முடியும். நம்மை பாவங்களில் இருந்து மீட்க யேசு தம்மையே பலியாக்கினார். இறை அரசை அறிவிக்க சீடர்கள் தமது உயிரையே இழக்க வேண்டி இருந்தது. இன்றும் குடும்பத்திற்காக தமது விருப்பங்களை, ஆசைகளை விட்டுக்கொடுத்து வாழ்பவர்கள் நம் மத்தியில் இல்லையா? அவற்றை அவர்கள் விடுவதனால்தான் அவர்களின் குடும்பம் உயர்ந்த நிலையை அடைகிறது. எனவே இறை அரசை நாம் அடைய வேண்டுமாயின் பலவற்றை இழக்க நாம் தயாராக இருக்க வேண்டும். சாலமோன் எவ்வாறு இறைவனோடு இணைந்திருந்தாரோ அவ்வாறே நாமும் யேசுவோடு இணைந்திருப்போம்.